# மே 3
# புனித பிலிப்பு
# புனித யாகப்பர்



St. Philip



St. James the Less

# May 3
# St Phillip
# St James

## *புனித பிலிப் (-80)*

இவர் கலிலேயா நாட்டிலுள்ள பெத்சைதா என்னும் ஊரில் பிறந்தார். இவர் மணம் முடித்து, மக்களும் இருந்தது. இயேசு இவரை அழைத்தார். தமக்குக் கிடைத்த பாக்கியம் பிறருக்கும் கிடைக்க ஆசித்து இவர் நத்தானியேலை இயேசுவிடம் அழைத்து வந்தார். இவர் வழியாக புற இனத்தார் இயேசுவை காண விரும்பினார். இரவு உணவு நேரத்தில் இயேசு தம் தந்தையைப் பற்றி உருக்கமாகப் பேசினார். அப்போது பிலிப் "ஆண்டவரே பிதாவை எங்களுக்குக் காண்பியும், அதுவே எங்களுக்கு போதும்" என்றார்.

## *புனித யாகப்பர் (-62)*

இவர் தந்தையின் பெயர் அல்பேயுஸ். தாய் புனித கன்னிமரியாளுக்கு நெருங்கிய உறவினர். இவர் புனித யூதா ததேயுவின் சகோதரர். ஆதித்திருச்சபையில் இவருக்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது. 51-ஆம் ஆண்டில் நடந்த சங்கத்தில் இராயப்பர், பர்ணபாஸ், சின்னப்பர் ஆகியோருக்குப் பின் இவர் பேசினார். இவரது சொற்கள் இறுதி முடிவாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. இவர் அடிக்கடி முழந்தாளிட்டு முகங்குப்புற விழுந்தமையால் இவரது முழங்கால்களும் நெற்றியும் மரத்துப் போயின என்று புனித ஏரோணிமுஸ் கூறுகிறார். 59-ஆம் ஆண்டில் இவர் ஒரு நிருபம் எழுதியதில் விசுவாசம் மாத்திரம் போதாது; நற்செயல்களும் தேவை என்று அதில் இவர் வற்புறுத்துகிறார். நோயில் பூசுதலைப் பற்றியும் இவர் கூறுகிறார். யூதர்கள் இவரை தேவாலயத்தின் உச்சியிலிருந்து தள்ளிய பின் கல்லால் எறிந்து பின் சிரசில் தடியால் அடித்துக் கொன்றார்கள்.

**சிந்தனை:**

புனிதர்களைப் போல் நாமும் அநேகரை இயேசுவிடம் கொண்டு வர வேண்டும்.

**செபம்:**

ஆண்டவரே, செயல்களால் எண்பிக்கப்படும் உயிருள்ள விசுவாசத்தை எங்களுக்குத் தாரும்.